இணைப்பு II

(255ஆம் பக்கத்தில் உள்ள அடிக்குறிப்பைக் காண்க.)

மானியக் கோரிக்கை எண் 38—தேர்தல்கள்

கொள்கை விளக்கக் குறிப்பு 2010–2011

தேர்தல் செலவுகளுக்கான நிதி ஒதுக்கீடு "2015.00 தேர்தல்கள்" என்ற பெருந்தலைப்பின்கீழ் மானியக் கோரிக்கை எண் 38-இல் இடம் பெற்றுள்ளது. 1-1-2010 ஆம் நாளை தகுதி ஏற்படுத்தும் நாளாகக் கொண்டு புகைப்பட வாக்காளர் பட்டியல் தயாரித்தல் / திருத்தம் மேற்கொள்ளுதல், புகைப்பட வாக்காளர் பட்டியல் அச்சிடுதல், ஏற்கெனவே வாக்காளர் அடையாள அட்டை வழங்கப்படாத வாக்காளர்கள் மற்றும் புதிய வாக்காளர்களுக்கு புகைப்பட அடையாள அட்டை வழங்குவதற்கும், நிரந்தர தேர்தல் பணியாளர்களின் சம்பளம் மற்றும் இதர படிகள், பயணச் செலவுகள் போன்ற செலவினங்களை மேற்கொள்வதற்காகவும் இம்மானியக் கோரிக்கையின்கீழ் ரூ.40,89,64,000/- நிதி தேவைப்படுகிறது. தற்சமயம் தமிழ்நாட்டிலிருந்து மக்களவைக்கோ, மாநில சட்டப் பேரவைக்கோ காலியிடம் ஏதுமில்லை.

மானியக் கோரிக்கை எண் 38ன்கீழ் தேர்தலுக்காக 2010-2011 ஆம் ஆண்டிற்கு கீழே குறிப்பிடப்பட்டுள்ள இனங்களுக்கு செலவிட தேவைப்படும் தொகை ரூ.40,89,64,000/- (அனுமதிக்கப்பட வேண்டியது) ஆகும்.

2015. தேர்தல்கள் (ஐ. திட்டத்தில் சேராதது)

102. தேர்தல் அதிகாரிகள்		ரூபாய்
எஎ. சட்டப் பேரவை, நாடாளுமன்றத் தொகுதிகள்	-	*7,58,74,000/-*
103. புகைப்பட வாக்காளர் பட்டியல்களை தயாரித்து அச்சிடுதல்		
எஎ. சட்டப் பேரவைத் தொகுதிகள்	-	*27,52,28,000/-*

[2010 மே 14

104. நாடாளுமன்ற மக்களவைக்கும் மாநிலச் சட்டப் பேரவைக்கும் ஒரே சமயத்தில் தேர்தல் நடத்துவதற்கான செலவுகள்

எஎ.	*நாடாளுமன்ற மக்களவைக்கும் சட்டப் பேரவைக்கும் ஒரே சமயத்தில் நடைபெறும் தேர்தல்கள்*	*- 41,85,000/-*

105. நாடாளுமன்றத் தேர்தல் நடத்துவதற்கான செலவுகள்

எஎ.	*இடைத் தேர்தல்கள்*	*- 16,000/-*
எபி.	*மக்களவைக்குத் தேர்தல்கள்*	*- 25,26,000/-*

106. மாநிலச் சட்டமன்றத் தேர்தல் நடத்துவதற்கான செலவுகள்

எஎ.	*மாநில சட்டப் பேரவை*	*- 34,20,000/-*

108. வாக்காளர்களுக்கு புகைப்பட அடையாள அட்டை வழங்குதல்

எஎ.	*வாக்காளர்களுக்கு புகைப்பட அடையாள அட்டை வழங்கும் திட்டம்*	*- 4,77,15,000/-*
	மொத்தம்	*- 40,89,64,000/-*

மேற்சொன்ன செலவினங்களுக்கான மதிப்பீடுகள் கீழே விவரமாக விவரிக்கப்பட்டுள்ளன.

102. தேர்தல் அதிகாரிகள்

எஎ. சட்டப் பேரவை, நாடாளுமன்றத் தொகுதிகள்

மதிப்பீடு: ரூ.7,58,74,000/–

1950 ஆம் ஆண்டு மக்கள் பிரதிநிதித்துவச் சட்டம், பிரிவு 13 எ-ன்கீழ் தேர்தல் ஆணையத்தால் நியமனம் செய்யப்பட்ட தலைமைத் தேர்தல் அதிகாரி ஒவ்வொரு மாநிலத்திலும் அம்மாநிலத்தின் அனைத்து சட்டமன்றத் தொகுதிகளிலும்

2010 மே 14]

வாக்காளர் பட்டியல் தயாரித்தல்/திருத்தம் மேற்கொள்ளும் பணிகள் மற்றும் 1951ஆம் ஆண்டு மக்கள் பிரதிநிதித்துவச் சட்டம், பிரிவு 20-ன்படி நாடாளுமன்றம் மற்றும் மாநில சட்டமன்ற தேர்தல் நடத்தும் பணிகளையும் மேற்கொள்வார். தலைமைத் தேர்தல் அதிகாரிக்கு அலுவல் பணியில் உதவி புரிய ஒரு இணைத் தலைமைத் தேர்தல் அதிகாரி (கணினிமயமாக்குதல்) துணைச் செயலாளர் நிலையிலும், ஒரு இணைத் தலைமைத் தேர்தல் அதிகாரி கூடுதல் செயலாளர் நிலையிலும் உள்ளனர். சார்புச் செயலாளர் நிலையில் இரண்டு உதவி தலைமைத் தேர்தல் அதிகாரிகளும் உள்ளனர். பொது (தேர்தல்) துறையில் ஆறு நிரந்தரப் பிரிவுகள் உள்ளன.

தேர்தல் நிருவாகப் பணிகளில் தலைமைத் தேர்தல் அதிகாரிக்கு உதவி புரிய 1950 ஆம் ஆண்டின் மக்கள் பிரதிநிதித்துவச் சட்டம், பிரிவு 13எஎ-ன்படி அனைத்து மாவட்ட ஆட்சியர்களும் (சென்னையைத் தவிர) மாவட்டத் தேர்தல் அதிகாரிகளாக அறிவிக்கப்பட்டுள்ளனர். சென்னை மாவட்டத்திற்கு சென்னை மாநகராட்சி ஆணையர் மாவட்டத் தேர்தல் அதிகாரியாக அறிவிக்கப்பட்டுள்ளார். ஊரகத் தொகுதிகளுக்கு வருவாய் கோட்ட அதிகாரிகள் தரத்தில் வாக்குப்பதிவு அதிகாரிகள் உள்ளனர். கோயம்புத்தூர், மதுரை, திருச்சிராப்பள்ளி, ஈரோடு, திருப்பூர் மற்றும் சேலம் ஆகிய மாநகராட்சி தொகுதிகளுக்கு மாநகராட்சி ஆணையர்கள்/துணை ஆணையர்கள் வாக்குப்பதிவு அலுவலர்களாக அறிவிக்கப்பட்டுள்ளனர். வட்டாட்சியர்கள் மற்றும் நகராட்சி ஆணையாளர்கள் உதவி வாக்குப் பதிவு அதிகாரிகளாக அறிவிக்கப்பட்டுள்ளனர். சென்னை மாநகரைப் பொறுத்தவரை, சென்னை மாநகராட்சியில் உள்ள பத்து மண்டல அதிகாரிகளும் அந்தந்த மண்டலங்களுக்கு வாக்குப் பதிவு அதிகாரிகளாகவும், உதவி வருவாய் அதிகாரிகள் உதவி வாக்குப் பதிவு அதிகாரிகளாகவும் அறிவிக்கப்பட்டுள்ளனர்.

தேர்தல் பணிகளை கவனிக்க, ஒவ்வொரு மாவட்ட ஆட்சித் தலைவர், வருவாய் கோட்ட அலுவலர், மற்றும் வட்டாட்சியர் அலுவலகங்களுக்கும் ஒரு நிரந்தர உதவியாளர் பணியிடம் தோற்றுவிக்கப்பட்டுள்ளது. இதேபோல், கோயம்புத்தூர், மதுரை, திருச்சிராப்பள்ளி மற்றும் சேலம் ஆகிய மாநகராட்சி ஆணையர்களின் அலுவலகங்களிலும் ஒரு நிரந்தர உதவியாளர் பணியிடமும் ஏற்படுத்தப்பட்டுள்ளது. சென்னை மாநகரைப்

[2010 மே 14

பொறுத்தமட்டில், சென்னை மாநகராட்சி ஆணையர் மற்றும் மாவட்ட தேர்தல் அதிகாரிக்கு உதவும்பொருட்டு ஒரு மாவட்ட வருவாய் அதிகாரி (தேர்தல்கள்) பதவி தற்காலிகப் பணியிடமாகத் தோற்றுவிக்கப்பட்டுள்ளது. மேலும் ஒரு வட்டாட்சியர், மூன்று உதவியாளர்கள், ஒரு தட்டச்சர், ஒரு பதிவேடு எழுத்தர் மற்றும் ஒரு அலுவலக உதவியாளர் ஆகிய நிரந்தரப் பணியிடங்கள் தேர்தல் சம்பந்தப்பட்ட பணிகளை கவனிக்க சென்னை மாநகராட்சி ஆணையர் அலுவலகத்தில் தோற்றுவிக்கப்பட்டுள்ளன.

தேர்தல் பணிக்காக தோற்றுவிக்கப்பட்டுள்ள அதிகாரிகள் மற்றும் அலுவலர்களின் ஊதியச் செலவுகள், பயணச் செலவுகள், அலுவலகச் செலவினம், சில்லரை செலவினம், தொலைபேசிக் கட்டணங்கள் முதலான செலவினங்கள் இத்துணைக் கணக்குத் தலைப்பின்கீழ் மேற்கொள்ளப்படுகிறது. இச்செலவினங்களில் 50 விழுக்காட்டினை மத்திய அரசு ஏற்றுக்கொள்ளும்.

103. புகைப்பட வாக்காளர் பட்டியல்களை தயாரித்து அச்சிடுதல்

எஎ சட்டப் பேரவைத் தொகுதிகள்:

மதிப்பீடு: ரூ.27,52,28,000/-

இம்மாநிலத்திலுள்ள அனைத்து சட்டமன்றப் பேரவைத் தொகுதிகளின் புகைப்பட வாக்காளர் பட்டியல்களைத் தயாரித்தல் (திருத்தங்கள் உட்பட) மற்றும் அச்சிடுவதற்கான எல்லாவிதமான செலவினங்கள் இத்துணைத் தலைப்பின்கீழ் மேற்கொள்ளப்படும். இப்பணிக்காக நியமிக்கப்படும் தற்காலிகப் பணியாளர்களின் சம்பளம் மற்றும் படித்தொகைகள், வாக்குச் சாவடி நிலை அலுவலர்களுக்கு வழங்கப்படும் ஊதியம், எழுதுபொருள், அச்சிடும் செலவுகள் போன்றவையும் இத்துணைத் தலைப்பின்கீழ் அடங்கும். சென்னை ஆவணக் காப்பகத்தில் வாக்காளர் பட்டியல்களை பராமரிப்பதற்காக அனுமதிக்கப்பட்டுள்ள நிரந்தரப் பணியிடங்களான ஒரு உதவியாளர் மற்றும் ஒரு பதிவேடு எழுத்தர் ஆகியோருக்கு சம்பளம் மற்றும் படித்தொகைகள் வழங்க இத்துணைத் தலைப்பின்கீழ் நிதி ஒதுக்கீடு தேவைப்படுகிறது.

1950 ஆம் ஆண்டு மக்கள் பிரதிநிதித்துவச் சட்டம், பிரிவு 21-ன்படி, மக்களவை அல்லது மாநில சட்டமன்றத்திற்கு நடைபெறும் ஒவ்வொரு பொதுத் தேர்தலுக்கு முன்னரும் மற்றும் காலியான இடத்தை நிரப்புவதற்காக நடத்தப்படும் இடைத் தேர்தலுக்கு

2010 மே 14]

முன்னரும் வாக்காளர் பட்டியல்கள் திருத்தி அமைக்கப்பட வேண்டும். இந்திய தேர்தல் ஆணையம் உத்தரவு பிறப்பிக்கும் பட்சத்தில் எந்த ஒரு ஆண்டிலும் ஒரு குறிப்பிட்ட நாளை தகுதியேற்படுத்தும் நாளாகக் கொண்டு வாக்காளர் பட்டியல் திருத்தம் மேற்கொள்ளப்படும். இந்திய தேர்தல் ஆணையத்தின் அறிவுரைகளின்படி எந்த ஒரு தொகுதிக்கும் வாக்காளர் பட்டியல் சிறப்புத் திருத்தம் செய்யும் பணி மேற்கொள்ளப்படலாம்.

வாக்காளர் பட்டியல்கள் வாக்காளர் பதிவு அதிகாரிகளால் ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட உதவி வாக்காளர் பதிவு அதிகாரிகளின் உதவியுடன் தயாரித்து, தேவைப்படும் திருத்தங்களுடன் வெளியிடப்படுகின்றன. தலைமைத் தேர்தல் அதிகாரியின் மேற்பார்வை, அறிவுரைகள் மற்றும் கட்டுப்பாட்டின்கீழ் மாவட்ட ஆட்சித் தலைவர்களும், சென்னை மாநகரைப் பொறுத்தமட்டில் சென்னை மாநகராட்சி ஆணையரும் மாவட்ட தேர்தல் அதிகாரிகளாக அறிவிக்கப்பட்டிருக்கிறார்கள். அவர்கள் வாக்காளர் பட்டியல் தயாரித்தல் மற்றும் திருத்துதல் பணிகளை ஒருங்கிணைத்து கண்காணித்து வருகின்றனர்.

வாக்காளர் பட்டியல்கள் தொடர் திருத்தத்தின் ஒரு பகுதியாக, வீடுவீடாகச் சென்று 100 விழுக்காடு வாக்காளர் பட்டியல் கள சரிபார்ப்புப் பணி டிசம்பர், 2009 முதல் பிப்ரவரி 2010 வரை மேற்கொள்ளப்பட்டு வாக்காளர் பட்டியல்கள் செம்மையாக தயார் செய்யப்பட்டு வருகின்றன. கணினியில் தகவல் பதிவு செய்யும் பணி தற்போது நடைபெற்று வருகின்றது. தொடர் திருத்தப்பணி நிறைவுற்ற பின்னர், 1-1-2010 ஆம் நாளை தகுதியேற்படுத்தும் நாளாகக் கொண்டு வாக்காளர் பட்டியல் சுருக்கமுறைத் திருத்தத்தினை இந்திய தேர்தல் ஆணையம் விரைவில் அறிவிக்கும்.

தகவல் தொழில்நுட்ப கட்டமைப்பு

இந்திய தேர்தல் ஆணையம், வாக்காளர் பட்டியல் தயாரிப்புப் பணியை செம்மையாகவும், பயனுள்ளவகையிலும் நிர்வகிக்க தகவல் தொழில்நுட்ப கணினியில் உள் மற்றும் வெளி கட்டமைப்பு வசதிகள், பயன்பாடு மற்றும் இவை தொடர்பான தொழில்நுட்ப நுணுக்கங்களை பயன்படுத்தி வருகிறது. இந்திய தேர்தல் ஆணையம் பணித்துள்ளபடி தேவையான கட்டமைப்பு வசதிகளும் தொழில்நுட்ப பணியாளர்களும் ஒவ்வொரு மாவட்ட தேர்தல் அதிகாரி அலுவலகத்திலும் பணியமர்த்தப்பட்டுள்ளனர். மாநிலம்

முழுவதற்குமான வாக்காளர் பட்டியல்களை கணினிமயமாக்கல் பணிகளை கையாளவும், கண்காணிக்கவும் தலைமை தேர்தல் அதிகாரி அலுவலகத்திலும் தகவல் தொழில்நுட்ப கட்டமைப்பு வசதிகள் ஏற்படுத்தப்பட்டுள்ளன.

இந்திய தேர்தல் ஆணையம் பணித்துள்ளபடி தலைமைத் தேர்தல் அதிகாரி அலுவலகம் / மாவட்ட தேர்தல் அதிகாரி அலுவலகங்களிலுள்ள பழைய கணினிகள் திறனுயர்த்தப்பட்டு / மாற்றப்பட்டு உயர்திறனுடன் கூடிய புதிய கணினிகள் வழங்கப்பட்டுள்ளன. தற்போது மாவட்டங்களில் உள்ள கணினிகளின் திறனை 256MB—யிலிருந்து 1GB RAM ஆக - மேம்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

தரவுத் தளத்தை ஒருமுகப்படுத்துதல்

(Centralisation of Database)

தமிழ்நாட்டில் வாக்காளர் பட்டியல் கணினிமயமாக்கப்பட்டதிலிருந்து கட்டுப்பாட்டு அட்டவணை மற்றும் வாக்காளர் பட்டியல் தரவுத் தளம் (Electoral database) ஆகியவை (MS-ACCESS) மென்பொருளில் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. மாவட்ட தேர்தல் அதிகாரிகளின் அலுவலகங்களில் வாக்காளர் பட்டியல் தரவுத் தளம் (Electoral database) பராமரிக்கப்பட்டு வருகிறது.

இந்திய தேர்தல் ஆணையத்தின் அறிவுறுத்தலின் பேரில் பிப்ரவரி 2008-ல் ஒருமுகப்படுத்தும் தரவுத் தளம் மேற்கொள்ளப்பட்டு முதற்படியாக, வாக்காளர் பட்டியல் தரவுத் தளத்தை (Electoral database) ஒருமுகப்படுத்துதல் மற்றும் அதன் மேலாண்மைக்காக வாக்காளர் பட்டியல் தரவுத் தளத்தை (MS-ACCESS மென்பொருளிலிருந்து SQL Server என்ற தரவுத் தொடர்பு மேலாண்மை முறைமை (RDBMS)—க்கு புலம்பெயர தேவை ஏற்பட்டது. SQL Server என்ற மென்பொருளுக்கு புலம்பெயரவும் அதனை சோதிக்கவும் மென்பொருளை மேம்படுத்திய பின்னர் உருவப்படங்களை வாக்காளர் பட்டியல் தரவுத்தளத்துடன் திருத்திய கட்டுப்பாட்டு அட்டவணையும் ஒன்றிணைத்தல் உள்ளிட்ட புலம்பெயர்தல் நடவடிக்கைகளும், ISCII என்ற எழுத்துருவிலிருந்து UNICODE என்ற எழுத்துருவிற்கு மாற்றம் செய்தல் போன்ற பணிகள் மேற்கொள்ளப்பட்டு ஆகஸ்டு 2009-இல் நிறைவு பெற்றன. பல்வேறு கூறுகளை (Module) மேம்படுத்த இணையம் சார்ந்த செயல்முறைகள் உருவாக்கப்பட்டு

2010 மே 14]

வருகின்றன. சேவையகம் (Servers) மற்றும் அதற்கு தேவையான மென்பொருள்கள் வாங்கப்பட உள்ளன.

வாக்காளர் பட்டியல் பாகங்கள், பிரிவுகள் மற்றும் வாக்குச் சாவடிகளை சீரமைப்பதற்காக புவியியல் குறியீட்டுமுறை (GIS) திட்டம்

வாக்காளர் பட்டியல்களின் நம்பகத்தன்மையை மேம்படுத்தும் பொருட்டும், பல வாக்குச் சாவடிகளை ஒரே இடத்தில் அமைக்காமல் அவற்றின் வாக்குப் பதிவுப்பரப்பை தெளிவாக வரையறை செய்து அறிவியல் முறையில் வாக்குச் சாவடிகளின் அமைவிடங்களை அமைக்கவும், மின்னணு வாக்குப்பதிவு இயந்திரம் மற்றும் தேர்தல் உபகரணங்களை வாக்குச் சாவடிக்கு கொண்டு செல்ல சீரான வழித்தடங்களைத் திட்டமிடுதல் முதலியவற்றுக்காகவும் புவியியல் குறியீட்டுமுறை (GIS) செயல்பாடுகளை மேற்கொள்ள வேண்டுமென்று இந்திய தேர்தல் ஆணையம் பணித்துள்ளது. இதற்காக, வாக்குச் சாவடி அமைவிடங்களையும், வாக்காளர் பட்டியல் பாகங்கள் / பிரிவுகளின் எல்லைகள் முதலியவற்றையும் புவியியல் குறியீட்டு முறையில் வரைபடங்களாக்க ELECGIS 1 என்று பெயரிடப்பட்ட முதல்கட்ட திட்டப் பணி திருச்சிராப்பள்ளியிலுள்ள பாரதிதாசன் பல்கலைக்கழகத்திடம் ஒப்படைக்கப்பட்டு நிறைவுபெற்றது. ELECGIS 2 என்று பெயரிடப்பட்டுள்ள இதன் இரண்டாம் கட்ட திட்டப் பணியில், விரிந்த நகர்ப்புறப் பகுதிகளை உள்ளடக்கிய திருவள்ளூர், காஞ்சிபுரம், சென்னை, கோயம்புத்தூர், மதுரை, திருச்சிராப்பள்ளி, சேலம் மற்றும் திருநெல்வேலி மாவட்டங்களிலுள்ள வாக்குச் சாவடிகளின் பாகங்கள்/பிரிவுகள் ஆகியவற்றைச் சீரமைக்கும் பணி ரூ.1.09 கோடி திட்டச் செலவில் பாரதிதாசன் பல்கலைக்கழகத்திடம் ஒப்படைக்கப்பட்டு பணிகள் நடைபெற்று வருகின்றன.

இந்த துணைக் கணக்குத் தலைப்பின்கீழ் வாக்காளர் பட்டியல் அச்சிடுதல், கணினியில் விவரங்களைப் பதிவு செய்தல், பணியாளர் ஊதியம், வாக்குச் சாவடி நிலை அலுவலர்களுக்கான ஊதியம், ELECGIS 2 திட்டத்திற்காக பாரதிதாசன் பல்கலைக்கழகத்திற்கான செலவினம், பயணப் படிகள் முதலியவற்றிற்கான செலவினங்களை மேற்கொள்ள நிதி ஒதுக்கீடு தேவைப்படுகின்றது. இதற்கென 2010-2011 ஆம் ஆண்டின் வரவு செலவுத் திட்டத்தில் ரூ.27,52,28,000/- ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இந்த செலவினத்தின் 50 விழுக்காட்டினை மத்திய அரசு ஏற்றுக்கொள்ளும்.

[2010 மே 14

104. நாடாளுமன்ற மக்களவைக்கும் மாநிலச் சட்டப் பேரவைக்கும் ஒரே சமயத்தில் தேர்தல் நடத்துவதற்கான செலவுகள்

எஎ. நாடாளுமன்ற மக்களவைக்கும் சட்டப் பேரவைக்கும் ஒரே சமயத்தில் நடைபெறும் தேர்தல்கள்

மதிப்பீடு: ரூ.41,85,000/–

நாடாளுமன்றம் மற்றும் சட்டப் பேரவைக்கு ஒரே நேரத்தில் தேர்தல் நடைபெறும்போது ஏற்படும் செலவினங்கள் அனைத்தும் இந்தத் துணைத் தலைப்பின்கீழ் மேற்கொள்ளப்படுகிறது, நாடாளுமன்றம் மற்றும் சட்டமன்றப் பேரவைக்கு தேர்தல்கள் நடைபெறும்போது பயன்படுத்தப்படும் மின்னணு வாக்குப் பதிவு இயந்திரங்கள், வேலூர், கோயம்புத்தூர் மற்றும் திருநெல்வேலி ஆகிய மாவட்டங்களிலுள்ள தனியார் கிடங்குகளிலும் விருத்தாச்சலம், விழுப்புரம், மதுராந்தகம் மற்றும் காஞ்சிபுரம் ஆகிய இடங்களிலுள்ள தமிழ்நாடு சேமிப்புக் கிடங்கு கழக கிடங்குகளிலும் வைக்கப்பட்டுள்ளன. தனியார் கிடங்குகள் மற்றும் தமிழ்நாடு சேமிப்புக் கிடங்கு கழக நிறுவனத்திற்கு வாடகைக் கட்டணம் வழங்குதல் மற்றும் தேர்தல் பொருட்கள் வாங்குதல் குறித்த செலவினங்கள் ஆகியவை இத்துணைத் தலைப்பின்கீழ் செலவிடப்படும். தலைமைத் தேர்தல் அதிகாரி அலுவலக வாகன பராமரிப்புச் செலவுகள் ஆகியவைகளும் இந்தத் துணைத் தலைப்பின்கீழ் மேற்கொள்ளப்படும். இச்செலவினங்களில் 50 விழுக்காட்டினை மத்திய அரசு ஏற்றுக்கொள்ளும்.

105. நாடாளுமன்றத் தேர்தல் நடத்துவதற்கான செலவுகள்

எஎ இடைத் தேர்தல்கள்

மதிப்பீடு: ரூ.16,000/– (அடையாள ஒதுக்கீடு)

மக்களவைத் தொகுதிகளில் இடைத் தேர்தல்கள் நடைபெற்றால் அதற்காகும் அனைத்துச் செலவினங்களும் இத்தலைப்பின்கீழ் மேற்கொள்ளப்படும். நாடாளுமன்றத்துக்கான பொதுத் தேர்தல்

2010 மே 14]

கடந்த 13-5-2009 அன்று நடைபெற்றுள்ளது. மேலும் தற்பொழுது தமிழ்நாட்டில் நாடாளுமன்றத் தொகுதிகளில் காலியிடம் ஏதுமில்லை. எனவே இத்துணைத் தலைப்பின்கீழ் அடையாள நிதி ஒதுக்கீடு மட்டுமே செய்யப்பட்டுள்ளது. இதற்காகும் அனைத்துச் செலவினங்களையும் மத்திய அரசே ஏற்றுக்கொள்ளும்.

105. நாடாளுமன்றத் தேர்தல் நடத்துவதற்கான செலவுகள்

எபி நாடாளுமன்ற மக்களவைக்குத் தேர்தல்

மதிப்பீடு: ரூ.25,26,000/–

மக்களவைக்கு மட்டும் பொதுத் தேர்தல்கள் நடைபெறும்போது அதற்கான செலவினங்கள் அனைத்தும் முதலில் இத்துணைத் தலைப்பின்கீழ் மேற்கொள்ளப்பட்டு பின்னர் மைய அரசிடமிருந்து முழுமையாக பெறப்படும். 15-வது நாடாளுமன்றத்துக்கான தேர்தல் கடந்த 13-5-2009 அன்று நடைபெற்றது. தற்பொழுது தமிழ்நாட்டில் நாடாளுமன்றத் தொகுதிகளில் காலியிடம் ஏதுமில்லை. மக்களவைக்கான பொதுத் தேர்தல்கள் நடைபெற்றால் அதற்காகும் அனைத்துச் செலவினங்களையும் மத்திய அரசே ஏற்றுக்கொள்ளும்.

106. மாநில சட்டமன்றத் தேர்தல் நடத்துவதற்கான செலவுகள்

எஎ மாநிலச் சட்டப் பேரவை

மதிப்பீடு: ரூ.34,20,000/–

மாநில சட்டமன்றப் பேரவைக்குப் பொதுத் தேர்தல் / இடைத் தேர்தல் நடைபெற்றால் அவை தொடர்பான செலவினங்கள் இந்தத் துணைத் தலைப்பின்கீழ் மேற்கொள்ளப்படும். 2009-2010 ஆம் ஆண்டில் பர்கூர், தொண்டாமுத்தூர், கம்பம், இளையான்குடி, ஸ்ரீவைகுண்டம், வந்தவாசி (தனி), திருச்செந்தூர் மற்றும் பெண்ணாகரம் ஆகிய 8 சட்டமன்றத் தொகுதிகளுக்கான இடைத் தேர்தல் நடைபெற்றது. தற்பொழுது சட்டமன்றப் பேரவையில் காலியிடம் ஏதுமில்லை. மேலும், தமிழ்நாடு சட்டமன்றப் பேரவைக்கான பொதுத் தேர்தல் அடுத்த ஆண்டில்

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

அதாவது மே, 2011-க்குள் நடத்தப்படவேண்டும். நடைபெறவுள்ள தமிழ்நாடு சட்டமன்றப் பேரவைக்கான பொதுத் தேர்தல் பணிகளை மேற்கொள்ள தலைமைத் தேர்தல் அதிகாரியின் அலுவலகம் மற்றும் மாவட்ட தேர்தல் அதிகாரிகளின் அலுவலகங்களில் உரிய காலத்தில் கூடுதல் பணியிடங்கள் தோற்றுவிக்கப்படும். தமிழ்நாடு சட்டமன்றப் பேரவைக்கான பொதுத் தேர்தலுக்கான அனைத்துச் செலவினங்களையும் மாநில அரசே ஏற்றுக்கொள்ளும்.

108. வாக்காளர்களுக்கு புகைப்பட அடையாள அட்டை வழங்குதல்

எஎ. வாக்காளர்களுக்கு புகைப்பட அடையாள அட்டை வழங்கும் திட்டம்

மதிப்பீடு: ரூ.4,77,15,000/–

தமிழ்நாட்டில் வாக்காளர் அடையாள அட்டை வழங்கும் பணி 1996 ஆம் ஆண்டிலிருந்து மூன்று கட்டங்களாக நடைபெற்றுள்ளன. 2006 ஆம் ஆண்டு தமிழ்நாடு சட்டமன்றத் தேர்தல்களுக்கு முன்னதாக நான்காம் கட்டப் பணிகள் பிப்ரவரி 2006 முதல் ஏப்ரல் 2006 வரை நடைபெற்றன. தமிழ்நாடு சட்டமன்றத் தேர்தல்கள், 2006 ஆம் ஆண்டு மே மாதத்தில் நடைபெற்றபோது 75 விழுக்காடு வாக்காளர்களுக்கு வாக்காளர் புகைப்பட அடையாள அட்டைகள் வழங்கப்பட்டன. மேற்சொன்ன விழுக்காடு, ஒவ்வொரு சட்டமன்றத் தொகுதிகளிலும் வேறுபடும். தற்போது 99.34% வாக்காளர்களுக்கு புகைப்படங்கள் சேகரிக்கப்பட்டுள்ளது மற்றும் 99.54% வாக்காளர்களுக்கு வாக்காளர் புகைப்பட அடையாள அட்டை வழங்கப்பட்டுள்ளது. 234 சட்டமன்றத் தொகுதிகளுக்கும் வாக்காளர் புகைப்பட அடையாள அட்டை வழங்கும் மையங்கள் அமைக்கப்பட்டு வாக்காளர்களுக்கு மாற்று அட்டை / புதிய வாக்காளர் புகைப்பட அடையாள அட்டை வழங்கும் பணி தொடர்ந்து நடைபெற்று வருகிறது. இச்செலவினத்தில் 50 விழுக்காட்டினை மத்திய அரசு ஏற்றுக்கொள்ளும்.